## தம்புள்ள பிரதேச சபை
## மாத்தளை மாவட்டம்

-----------------------------------

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2011 மே 23 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2010 மே 04 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தம்புள்ள பிரதேச சபையின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) முன்னைய ஆண்டிற்குரிய 18 சந்தர்ப்பங்களின் போது அறவிடப்பட்ட ரூபா 72,231 தொகையான வருமானத்தை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கீடு செய்தமையால் ஆண்டின் வருமானம் அப்பெறுமானத்தால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்குரிய செலுத்த வேண்டிய ரூபா 946,386 ஆன செலவினத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு செய்யப்படாமையால் ஆண்டின் செலவினம் மற்றும் செலவினக் கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்காகவும் கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையிடமுள்ள 06 காணித்துண்டுகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளில் கொடுத்த கழிவு ரூபா 388 தொகை மற்றும் பெற்ற கழிவு ரூபா 138,286 தொகை என்பவற்றை உரிய ஆண்டுகளில் வருமானம் மற்றும் செலவினக் கணக்கிற்கு சீராக்கம் செய்யாமல் ஐந்தொகையில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) 09 சந்தர்ப்பங்களில் கிடைத்த வருமானம் ரூபா 1,569,745 தொகையை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட வேண்டிய போதிலும், வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(எ) தம்புள்ள பஸ் நிலையத்தின் நிர்மாணத்திற்காக உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட கடனுக்காக மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய கடன் தவனை மற்றும் வட்டித் தொகைகளின் கூட்டுத்தொகையான ரூபா 75,393,722 தொகையை கணக்கீடு செய்யாமையால் ஆண்டின் செலவினம் அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஏ) 2010 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 890 பெறுமதியான மைக்ரோபோனை நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) சென்ற ஆண்டுகளுக்குரிய கொடுக்கல்வாங்கல்களை திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட வேண்டிய போதிலும், 2009 ஆம் ஆண்டிற்குரிய 04 சந்தர்ப்பங்களில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 146,237 தொகையான எரிபொருள் பட்டியல்களின் பெறுமதியை, திரண்ட நிதியத்திற்குச் சீராக்காமல் ஆண்டின் செலவினத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

(ஒ) 02 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டிருந்த ரூபா 23,106 தொகையான முற்பணத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 60,077,161 ஆக இருந்ததுடன், பட்டோலைகள்/அறிக்கைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 110,981,823 ஆக இருந்தது.

### 1.3.3 வங்கிக் கணக்கிணக்கங்கள்

(அ) 20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து தீர்வையாகாத வைப்புக்கள் ரூபா 19,574 தொடர்பாக வங்கியிடம் விசாரித்து அதன் பிரகாரம் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) ரூபா 51,750 கூட்டுத்தொகையான மதிப்பிழந்த காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 189 மற்றும் 486 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 செலுத்த வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 300,256,871 ஆக இருந்தது.

### 1.3.5 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### (அ) பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரை 13 கணக்காய்வு ஐய வினாக்களுக்குப் பதில் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன், அந்த ஐய வினாக்களுக்குட்பட்ட கணிப்பிடக்கூடிய கொடுக்கல் வாங்கல்களது பெறுமதி ரூபா 39,513,287 ஆக இருந்தது.

#### (ஆ) தகவல்கள் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் மொத்தம் ரூபா 182,476,446 இற்குரிய கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

#### (இ) பதிவேடுகளை பராமரிக்காமை

கீழே காட்டப்பட்டுள்ள ஏடுகள் பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(i) கடன்கொடுத்தோர் பதிவேடு

(ii) கடன்பட்டோர் பதிவேடு

### 1.3.6 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
| --- | --- |
| (அ) <u>1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) விதிகள்</u> | |
| 99 ஆம் விதி | சகல கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் தலைவரால் அல்லது அதிகாரமளிக்கப் பட்டிருந்தால் உப தலைவரால் சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், ரூபா 349,908 பெறுமதியான 06 கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் சான்றுறுதிப்படுத்தாமல் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ஆ) <u>இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம்</u> | |
| (i) நி.பி 371(ஈ) | வழங்கப்பட்ட முற்பணம் உரிய செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2007 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்ட ரூபா 14,375 ஆன முற்பணங்கள் மற்றும் 2006 ஆம் ஆண்டின் போது சேமிக்கப்பட்ட லீவுளுக்காக 2007 ஆம் ஆண்டின் போது உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்டிருந்த ரூபா 293,850 தொகையை உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடமிருந்து 2010 செப்தம்பர் 30 ஆம் திகதி வரையில் மீள்நிரப்பியிருக்கவில்லை. |

| | |
|---|---|
| (ii) நி.பி 1646 | நாளாந்த ஓட்டப்பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்த மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 06 வாகனங்களின் 2010 ஆம் ஆண்டிற்குரிய ஓட்டப் பதிவேடுகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) <u>பொது நிர்வாகச் சுற்றறிக்கை</u> | |
| 2009 செப்தம்பர் 18 ஆம் திகதிய பீஎஸ் 437 ஆம் இலக்கம் | அரசாங்கத்திற்குரிய வாகனங்களின் காப்புறுதி மேவுகையானது நேரடியாக தேசிய காப்புறுதி கூட்டுத்தாபனத்தி டமிருந்தோ அல்லது இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடமிருந்தோ பெற்றுக் கொள்ள வேண்டிய போதிலும், சபைக்குச் சொந்தமான 03 வாகனங்களுக்கு காப்புறுதி மேவுகையை தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றிடம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |
| (ஈ) மத்திய மாகாண இறைவரி ஆணையாளரின் 2001 யூலை 17 ஆந் திகதிய 01/2001 ஆம் இலக்க சுற்றறிக்கை | ரூபா 18,400 செலவிடப்பட்டு 23 பிளாஸ்டிக் கதிரைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், சுற்றறிக்கையின் பிரகாரம் 5% விற்பனை புரள்வு வரி கழிக்கப்பட்டிருக்க வில்லை. |

(உ) <u>கொள்வனவு வழிகாட்டிக் கோவையின்</u>

(i) 1:2:1 (இ) பந்தி

தம்புள்ள பஸ் நிலையத்தின் வர்த்தகத் தொகுதியை 2008 செப்தம்பர் 01 ஆம் திகதி முதல் 2009 ஆகஸ்ட் 30 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் சுத்திகரிப் பதற்கான ஒப்பந்தத்தை கேள்வி கோரி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு ஒப்படைக்கப் பட்டிருந்தது. ஒப்பந்த கால எல்லை முடிவடைந்தவுடன் மீண்டும் சேவையை வழங்குவதற்காக திறந்த கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு ஒப்பந்தகாரர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காமல் முதலாம் ஒப்பந்தகாரருக்கே தொடர்ந்தும் சேவையை வழங்குவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. இதனால் தகைமையுள்ள அக்கரை செலுத்தும் தரப்பினர்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போயிருந்ததுடன், கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் நோக்கத்தையும் நிறைவேற்ற முடியாதிருந்தது.

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 25,532,920 ஆக இருந்ததுடன், அதற்கு நேர் ஒத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 15,215,187 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | 2010 மதிப்பிடப் பட்ட | 2010 உள்ளவா றான | 2010 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | 2009 மதிப்பி டப்பட்ட | 2009 உள்ள வாறான | 2009 திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) வீதவரியும் வரியும் | 6,000 | 3,908 | 2,092 | 5,800 | 2,749 | 3,051 |
| (ii) வாடகை | 7,495 | 5,880 | 1,615 | 7,406 | 3,137 | 4,263 |
| (iii) அனுமதிப்பத்திரக் கட்டணம | 5,375 | 3,905 | 1,465 | 5,846 | 4,082 | 1,764 |
| (iv) ஏனைய வருமானம் | 34,600 | 27,729 | 6,871 | 98,694 | 29,491 | 69,204 |

### 2.2.2 வீதவரிகள்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவையான வீதவரிகளுக்குரிய ஆதனங்களை தடைசெய்து விற்பனை செய்வதன் மூலம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும், 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதியான ரூபா 2,896,218 தொகையை அதன் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.3 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதிவான் நீதிமன்றமொன்றினால் 2010 திசெம்பர் 31 வரை அறவிடப்பட்டு மாகாண இறைவரி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 5,213,059 தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 முத்திரைக் கட்டணம்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 6,027,300 முத்திரைக் கட்டணங்களாக கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.5 ஏனைய நிலுவை வருமானம்

1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதிக்கோவையின் 5(3),5(6) விதியின் பிரகாரம் சபைக்கு அறவிடப்பட வேண்டிய வருமானம் மற்றும் ஏனைய கட்டணங்கள் என்பவற்றை உரிய காலப்பகுதியில் சேகரிக்கப்படுவதாகவும் அவற்றை கணக்கீடு செய்து காண்பிப்பது தலைவரின் பொறுப்பாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் ரூபா 260,870 தொகையான வாடகை, ரூபா 309,050 தொகையான அனுமதிப் பத்திரக் கட்டணங்கள், ரூபா 6,027,300 தொகையான பிடிவிராந்துக் கட்டணங்கள், ரூபா 5,213,059 தொகையான தண்டப் பணங்கள் மற்றும் ரூபா 12,943,049 தொகையான ஏனைய வருமானம் என்பன 2010 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்படாது காணப்பட்டது.

### 2.2.6 தகணமண்டபத்திற்கான சேவைக் கட்டணங்கள்

தகணமண்டபத்தின் சேவையை வழங்குவதற்காக கட்டணமாக ரூபா 636,000 தொகை மற்றும் சடலங்களின் அஸ்தியை வைப்பதற்காக இடமொன்றை ஒதுக்குவதற்கான கட்டணமாக ரூபா 600,000 ஆன வருமானம் மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அதில் எத்தகைய வருமானமும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது

| | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| செலவின விடயம் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறானது | முரண் | பாதீடு செய்யப்பட்டது | உள்ளவாறானது | முரண் |
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 43,647 | 23,222 | 20,425 | 44,031 | 21,000 | 23,031 |
| ஏனையவை | 27,112 | 8,173 | 18,939 | 28,872 | 9,589 | 19,283 |
| உப மொத்தம் | 70,759 | 31,395 | 39,364 | 72,903 | 30,589 | 42,314 |
| மூலதனச் செலவினம் | 94,832 | 94,012 | 820 | 95,623 | 29,394 | 66,229 |
| மொத்தம் | 165,591 | 125,407 | 40,184 | 168,526 | 59,983 | 108,543 |

## 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் தரங்கள் | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| பதவி நிலைத்தரங்கள் | 01 | - |
| இடை நிலையினர் | 33 | 18 |
| ஆரம்ப மட்டத்தினர் | 42 | 38 |
| வேறு (அமைய /தற்காலிக) | - | 31 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

ரூபா 15,215,538 தொகையான பௌதீக வளங்கள் பயன்படுத்தப்படாமலும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்டும் காணப்பட்டமை தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டது.

### 2.5.2 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,685,713 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 108,602 ஆக இருந்தது.

### 2.5.3 அசைவற்ற நடைமுறைச் சொத்துக்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அசைவற்றுக் காணப்பட்ட சொத்துக்களின் பெறமதி ரூபா 1,816,121 ஆக இருந்தது.

### 2.5.4 கணிப்பீடு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீக பரிசோதனைகள்/கணிப்பீட்டு சபை அறிக்கை மூலம் உறுதிப்படுத்தப்படாத 2010 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு புத்தகப் பெறுமதி அடிப்படையில் கணக்கிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதி ரூபா 255,185,239 ஆக இருந்தது.

### 2.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 19(i)(i) ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமல் 11 ஊழியர்களை நியமித்து அவர்களின் சம்பளமாக ரூபா 1,550,647 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவில் சட்டரீதியாக நிதிஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாத விடயமொன்றான வாழ்த்து அட்டை அச்சீடு மற்றும் பதவியணிக்கான சீருடைக் கொள்வனவு என்பவற்றிற்காக ரூபா 41,850 தொகையும் புவக் அத்தாவெல சனசமூக மண்டபத்திற்கு 23 கதிரைகளை கொள்வனவு செய்வதற்காகவும் மீளாய்வாண்டின் போது ரூபா 18,400 செலுத்தப்பட்டிருந்தது.

(இ) மாவட்ட விலை நிர்ணயம் செய்தல் குழு அறிக்கையின் பிரகாரம் பெக்கோ இயந்திரத்திற்காக 8 லீற்றர் எரிபொருளுடன் மணித்தியாலமொன்றிற்கு ரூபா 800 உம் எரிபொருள் வழங்காத போது மணித்தியாலமொன்றிற்கு ரூபா 1,400 உம் நிர்ணயிக்கப்பட்டிருந்த போதும் அட்டுபெந்தியாவ பொதுக் கிணற்றை வெட்டுவதற்காக அவ்விலைகளை கருத்திற்கொள்ளாமல் மணித்தியால மொன்றிற்கு ரூபா 5,000 வீதம் 8 மணித்தியாலங்களிற்காக ரூபா 40,000 தொகை மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

### 2.7 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) கொம்போஸ்ட் செயற்திட்ட உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையான ஆரம்ப பயிற்சி மூன்று மாத காலங்களில் வழங்குவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர், தலைவருக்கு அறிவித்திருந்த போதிலும், சபைக்கு இதற்காக ஒரு காணி இல்லாமையால் கொம்போஸ்ட் செயற்திட்டத்தை ஆரம்பித்தலானது தொடர்ந்தும் தவிரக்கப்பட்டு வந்தது.

(ஆ) வருடாந்த பாதீட்டின் பிரகாரம் சபை அதிகாரப் பிரதேசத்திற்குரிய வியாபார நிலையங்களுக்காக அவ்விடங்களின் அளவு மற்றும் தன்மையின் பிரகாரம் வகைப்படுத்தப்பட்டு தீயணைக்கும் வசதிகளை வழங்குவதற்காக சேவைக் கட்டணமாக ரூபா 10,195,000 தொகையை பெற்றுக்கொள்வதற்காக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும், அவ்வருமானத்தைப் பெற்றுக்கொள்ள எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 12 களஞ்சிய விடயங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது ரூபா 2,900 பெறுமதியான 04 விடயங்களில் மிகையும் ரூபா 15,175 பெறுமதியான 04 விடயங்களில் பற்றாக்குறையும் அவதானிக்கப்பட்டது.

**2.8 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

சபையினால் பராமரிக்கப்பட்டு வருகின்ற சீமேந்து பிலொக் கல் உற்பத்தி செயற்திட்டத்தில் 2010 பெப்ரவரி முதல் செப்தம்பர் வரையான காலப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த பிலொக் கற்களின் எண்ணிக்கை 9,000 ஆக இருந்ததுடன், அதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயம் ரூபா 247,398 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஒரு பிலொக் கல்லின் அலகு விலை ரூபா 27.49 ஆக இருந்தது. பிலொக் கல்லின் விற்பனை விலை ரூபா 20 ஆக நிர்ணயம் செய்யப்பட்டு ஒப்பந்தகாரருக்கு வழங்கியமையால் ஒரு கல்லினால் ரூபா 7.49 வீதம் ரூபா 67,398 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**2.9 ஒப்பந்த நிர்வாகம்**

நிர்மாணிப்புக்கள்

**(அ) தகன மண்டபத்தைச் சுற்றி மதிற்சுவர் கட்டுதல்**

(i) தகனமண்டபத்தைச் சுற்றி மதிற்சுவர் கட்டுதல் 1 ஆம் கட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட வேலை விடய இலக்கம் 03 இன் பிரகாரம் அத்திவாரச் சுவரை நிர்மாணிப்பதற்காக 0.06 மீ. ஆழத்தில் காண் வெட்டப்பட வேண்டியதுடன், அளவீட்டு அறிக்கையின் பிரகாரம் 31.52 கன மீற்றர் மண்ணை அகற்றுவதற்காக ரூபா 18,597 செலுத்தப்பட்டிருந்தது. காணின் ஆழம் .045 மீற்றர் மட்டுமேயாக இருந்தமையால் அகற்றப்பட்ட மண் அளவு 23.64 கனமீற்றராக இருந்தமையால் ரூபா 4,649 கூடுதலாகச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் விடயப் பூர்த்தி

அறிக்கையின் 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் கருங்கல் சுவரின் கீழ் கொங்கிரீட் பாதத்தினை இடுவதற்காக 1 கனமீற்றருக்கு ரூபா 12,170 வீதம் 7.85 கனமீற்றருக்காக ரூபா 95,534 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் கொங்கிரீட் பாதத்தினை இடாமல் சுவரினை நிர்மாணித்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(ii) தகன மண்டபத்தைச் சுற்றி மதிற்சுவர் கட்டுதல் 2 ஆம் கட்டத்தின் மதிப்பீட்டில் குறிப்படப்பட்டிருந்த 02 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் கருங்கல் சுவரின் மேற்பகுதிக்கு சாந்து பூசுவதற்காக ரூபா 9,171 செலுத்தப்பட்டிருந்த போதிலும், மேற்பகுதிக்கு சாந்து பூசப்பட்டிருக்காமையினாலும் அத்தொகை சபை நிதியத்தில் நட்டத்தை ஏற்படுத்தியிருந்தது. அவ்வாறே 05 ஆம் இலக்க விடயத்தின் பிரகாரம் சுவரிற்கும் தூண்களுக்கும் பூச்சுப் பூசுவதற்காக ரூபா 26,711 செலுத்தப்பட்டிருந்த போதிலும், பூச்சு பூசப்பட்டிருக்கவில்லை. அதன் மூலமும் சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 35,882 ஆக இருந்தது.

(iii) தகன மண்டபத்திற்கு நுழையும் நுழைவாயிலின் இரும்புப் பட்டம் மற்றும் குழாய்கள் துருப்பிடித்திருந்ததுடன், சுவரின் தூண் ஒன்றின் சாந்து ஒரு பகுதி கலன்றுபோய் இருந்தது.

**(ஆ) கொட்டாவெல வீதியின் ஒரு பகுதியை புனரமைத்தல்**

(i) கொட்டாவெல வீதியின் ஒரு பகுதியை புனரமைப்பதற்காக 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் வீதியில் பரப்புவதற்காக 1.71 கன மீற்றர் குருணிக்கல் வழங்கி இருப்பதற்காக ரூபா 58,054 செலுத்தப்பட்டிருந்த போதிலும், இருக்கப்பட்ட குருணிக் கற்களின் அளவினைப் பரிசோதனைத் திகதி மற்றும் அளவு என்பவற்றை வேறாக அளவீட்டுப் பத்திரங்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 05 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 1.71 கனமீற்றர் குருணிக் கற்களைப் போக்குவரத்துச் செய்வதற்காக ரூபா 59,123 செலுத்தப்பட்டிருந்த போதிலும், குருணிக்கற்களை எந்த இடத்திலிருந்து போக்குவரத்துச் செய்யப்பட்டது என்பதையும் அவ்விடத்திற்குள்ள தூரம் தொடர்பாக விபரங்களும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) ஒப்பந்தத்தை நிறைவேற்றியதன் பின், அப்பாதையிலே வேறு இரு இடங்களில் ஏனைய நிதி ஒதுக்கீட்டின் கீழ் ரூபா 480,000 மற்றும் ரூபா 500,000 செலவிடப்பட்டு, கொங்கிரீட் இடல் மற்றும் கொங்கிரீட் துண்டுக் கற்களைளை பயன்படுத்தியிருந்தமையினால், அப்பகுதிகளுக்கு குருணிக்கற்களுக்காக

சபையினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 200,000 செலவினம் பயனற்ற செலவினமாக அமைந்திருந்தது.

(இ) தம்புள்ள பஸ்தரிப்பிடத்தின் வியாபார மத்திய நிலையத்தை சுத்தம் செய்தல்

---

(i) தம்புள்ள பஸ்தரிப்பிடத்தின் வியாபார மத்திய நிலையத்தை சுத்தம் செய்வதற்காக 2009 செப்தெம்பர் 01 ஆம் திகதி ஷயின் கிலீன் சர்விஸ் நிறுவனத்துடன் மேற்கொண்டிருந்த ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம், தம்புள்ள பஸ்தரிப்பிடத்தில் வியாபார மத்திய நிலையத்தை சுத்திகரிப்பதற்காகவும் சேரும் கழிவுகளை அப்புறப்படுத்துவதற்காகவும் கொடுப்பனவு அடிப்படையில் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவ்வுடன்படிக்கையில் 09 ஆம் நிபந்தனையின் பிரகாரம், சேரும் கழிவுப்பொருட்கள் ஒப்பந்ததாரரினால் அகற்றப்பட வேண்டுமாயினும் அவ்வுடன்பாட்டுக்கு முரணாக அச்சேவைக்காக ரூபா 3,000 மாதாந்த கட்டணமாக ஒப்பந்தக்காரரிடம் இருந்து பெற்றுக் கொண்டு கழிவுப்பொருட்கள் சபையினால் அகற்றப்பட்டிருந்தன. மாவட்ட விலை நிர்ணயித்தல் சபை விலைகளின் பிரகாரம், தூரத்தின் அடிப்படையில் உழவு இயந்திரத்திற்கான வாடகையாக நாளொன்றுக்கு ரூபா 1,124 வீதம் மாதம் ஒன்றிற்கு ரூபா 33,720 அறவிட வேண்டியிருந்த போதிலும், மாதம் ஒன்றுக்கு ரூபா 3,000 மட்டுமே அறவிடப்பட்டிருந்தது.

(ii) இந்நிறுவனம் தனி வியாபாரமாக பதியப்பட்டிருந்தாலும், 2010 ஆம் ஆண்டு சேவை வழங்குவதற்கான கட்டணத்தைப் பெற்றுக்கொள்வதற்காக நிறுவனத்தின் முகாமைப் பணிப்பாளராக நான்கு வெவ்வேறு நபர்களின் கையொப்பமிடப்பட்டு பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

---

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு

(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஈ) வருமான நிர்வாகம்